**சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியம் - 2021**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2. முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3. நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5. நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் | மீள அறிக்கையிடப்பட்ட கணக்கொன்று தனியான | கடந்த காலப்பகுதியின் தவறு சீராக்கலுக்கு |

| | | |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட நடைமுறை அல்லாச் சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கும் நோக்கில் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்காக மீள அறிக்கையிடப்பட்டு 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 54 ஆம் பந்திக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டமையினால் 2021 ஆம் ஆண்டில் சமர்பிபக்கப்பட்ட கணக்கின் விரிவான வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் அது தொடர்பான குறுகிய வெளிப்படுத்தலொன்று மட்டும் இல 12 ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொடர்புடையதாக மீண்டும் அறிக்கையிடல் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.5.2. கணக்கீட்டு கொள்கைகள்

| **கணக்கீட்டு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சிறைச்சாலை நிறுவனத்திற்கு பெறப்படுகின்ற நுகர்வுப் பொருட்கள் கணக்கிடுவதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று அடையாளப்படுத்தப்பட்டிராமை காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 1,275,460 ஆன நுகர்வுப் பொருட்கள் பெறுவனவு மற்றும் இருப்பு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நன்கொடையாக பெறப்படுகின்ற நுகர்வுச் சொத்துக்கள் கைதிகளின் நுகர்விற்காக கொடுக்கப்படுகின்ற பொருட்களாவதுடன் அப் பொருட்கள் கைதிகளின் நுகர்விற்காக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் போது அப் பொருட்கள் நுகர்வு நிறைவடைவதனால் அவை இருப்பாக இறுதி கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்படாது. எவ்வாறாயினும் நுகர்வுச் சொத்துக்கள் களஞ்சியசாலைக்கு பெற்றுக் கொண்டு பசிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நுகர்வுப் பொருட்கள் நன்கொடையாக கணக்கிடுவதற்கு கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தல் வேண்டும். |

### 1.5.3. கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| சொத்து மீள் மதிப்பிடல் | 24,350,099 | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் மீள அறிக்கையிடப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேய்மானம் சீராக்கப்படுவதற்கு முன்னர் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 11,709,369 ஆகவிருப்பினும், மீள அறிக்கையிபடப்பட்ட நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் அகற்றல் மிகை ரூபா 12,640,730 சீராக்கப்பட்டதன் பின்னர் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 24,350,099 என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இந்த சொத்து மீண்டும் அறிக்கையிடப்படுவதற்கு முன்னர் தெளிவாக பௌதீக ரீதியாக அடையாளப்படுத்தி அவை உள்ளவாராக மீள் மதிப்பிடப்படமைக்கு கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்கள சுற்றறிக்கை 21/2021 பிரகாரம் 2021 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து சொத்துக்களும் ஒட்டுமொத்தமாகக் கொண்டு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், பௌதீக ரீதியாக அடையாளப்படுத்தக் கூடிய அனைத்துச் சொத்துக்களும் மீள மதிப்பிடப்பட்டு சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்சேர்த்தல் வேண்டும். | சொத்துக்கள் மீள அறிக்கையிடுவதற்கு முன்னர் அச் சொத்துக்கள் தெளிவாக பௌதீக ரீதியாக அடையாளப்படுத்தி அவை உள்ளவாராக மீள் மதிப்பிடப்பட்டமை கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் ரூபா. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | தேசிய அரச சபையின் 1979 இன் 54 ஆம் இலக்க | 6000-0-0-006-0-081-0 ஆன பொது வைப்புக் கணக்கில் | வைப்புக் கணக்கில் உள்ள தொகை தொடர்பாக அக் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிறைச்சாலைகள் திணைக்கள கைதிகள் நலன்புரி நிதிய திருத்த சட்டம் 4 ''அ'' பிரிவு | ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 4,324,428 ஆன தொகை காணப்படினும் அத் தொகையினுள் உள்ளடக்கப்பட்டிருந்த, கைதிகள் விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்கு குறையாத காலத்தினுள் உரிமை கோரப்படாத தொகை அடையாளப்படுத்தப்பட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைதிகள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் கடந்துள்ள காலம் தொடர்பாக விபரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் அத் தொகை வருமானமாக கைதிகள் நலன்புரி கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பந்தியினால் உள்ளடக்கப்பட்ட நிதி பிரமாணம் | | | |
| | (i.) நி.பி 876 (2) (ஆ) | மீளாய்வாண்டிலும் நிதியத்தின் ஊடாக சிறைச்சாலை நலன்புரிக்காக எந்தவொரு பணத்தொகையும் செலவிடப்பட்டிராததுடன் திணைக்களத்தின் செலவின விடயத்தில் 03 செலவின விடயங்களின் கீழ் ரூபா 1,721,729,057 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அரச பாதீட்டின் கீழ் நிறைவேற்ற முடியுமென அல்லது நிதியம் தொடர்ந்து பேணிச் செல்லல் தேவையற்றதென | இந்த நிதியம் தொடர்ந்து பேணிச் செல்லல் தொடர்பாக ஆணையாளர் (புனர்வாழ்வு) உடன் மீண்டும் கலந்துரையாடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதுடன் அத் தீர்மானத்தின் அடிப்படையில் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | வருமான வழிகளினை அதிகரித்துக் கொள்ளல் அல்லது நிதியம் பேணிச் செல்லல் அவசியமற்றதெனில் சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தோன்றுமெனில் அந் நிதியத்தின் நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.எனினும் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii.) | நி.பி 877 2 (அ) | நிதியத்திற்கான தனி வங்கி கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிராததுடன் நலன்புரி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ வங்கி கணக்கின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்தது. | இந்த நிதியம் தொடர்ந்து பேணிச் செல்லப்படுமா என்று கலந்துரையாடப்பட்டு வருப்படுகின்றதுடன் அவ்வாறு பேணிச் செல்வதற்கு தீர்மானிக்கப்படுமெனில் 2022 ஆம் ஆண்டில் அதற்காக வங்கி கணக்கொன்று திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதி பிரமாணம் 877 (2) (அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 908,830 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 735,004 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 173,826 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ் முன்னேற்றத்திற்கு வருமானம் ரூபா 173,826 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைதிகள் நலன்புரி நிதியமொன்று தாபித்தல், கைதிகளின் பொது நலனுக்காக அதிலிருந்து செலவு ஏற்றல் மற்றும் அதற்கு தொடர்புடைய அனைத்து | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். காணப்பட்ட கொவிட் தொற்றின் காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| விடயங்கள் தொடர்பிலும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய அரச சபையின் 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகளுக்கான நலன்புரி நிதி அதிகாரச் சட்டம் தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும், மீளாய்வாண்டில் நிதியத்திற்கு பெறுவனவு ரூபா 908,830 உம் உள்ளடங்கலாக நிதியத்தின் ரூபா 4,527,464 ஆன மீதியொன்று காணப்படினும் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கைதிகள் நலன்புரி நிதியத்தின் பணிப் பொறுப்பான, கைதிகளுக்காக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்காகஅ தில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நோக்கங்கள் ஓரளவேனும் நிறைவேற்றிக் கொள்வதற்காக வெளி நிறுவனம் மற்றும் தன்னார்வு அமைப்புக்களிலிருந்தான பங்களிப்பின் ஊடாக நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)நிதியத்தின் முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன் , சிறைச்சாலைகளில் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை, பங்குப்பற்ற வேண்டிய ஆண்/பெண் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை, செலவிட நேர்கின்ற கிரயம் உள்ளடங்களாக முன்னைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அந்த திட்டங்களின் பிரகாரம் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படாத காரணத்தால் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். நிதியத்தின் வருமான வழிகள் நிச்சயமற்ற நிலையில் காணப்படுதல், அரச பங்களிப்பு இல்லாதிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் நிதியத்தின் மீதி போதுமானதாக இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினங்களை மேற்கொள்ள போதியளவான நிதி காணப்படாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாததுடன், இந்த நிதியினை தொடர்ந்து நடத்திச் செல்வதென்றால் எதிர்காலத்தில் மேலும் நிதியத்தின் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகை அறிமுகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் | நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முன்கூட்டிய திட்டமொன்று மற்றும் அந்த திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தி மதிப்பீடுகளை மேற்கொண்டு செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாயகம் (புனர்வாழ்வு) இற்கு அறிவுரை வழங்குவதற்கு குறித்துவைத்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஆ) சிறைக்கைதிகள் விடுதலை பெற்ற பின்னர் புனர்வாழ்வுக்கு உதவும் பின்னர் பொறுப்பேற்கும் சேவைகளுக்காக நிதியத்திலிருந்து எதுவித நிதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். நிதியத்தின் வருமான மூலங்கள் நிச்சயமற்ற நிலையில் காணப்படுதல், அரச பங்களிப்பு இல்லாதிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் நிதியத்தின் மீதி போதுமானதாக இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாததுடன், மீளாய்வாண்டிற்காக மதிப்பீடெடான்று மேற்கொள்ளப்படாததுடன், நிதியத்தின் நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக வெளிவாரி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் அனுசரணையுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. | சிறைக்கைதிகள் விடுதலை பெற்ற பின்னர் புனர்வாழ்வுக்கு உதவும் பின்னர் பொறுப்பேற்கும் சேவைகளுக்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவுள்ள போகம்பரை சிறைச்சாலையின் சிறைத் தொழிலாளர்களுக்காக வேறு திணைக்களங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,460 ஆன மீதியொன்று மற்றும் கடந்த ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட பதுளை சிறைச்சாலையின் சிறைத் தொழிலாளர்களுக்கு திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,400 ஆன மீதி இது வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சிறை சம்பளம் அத்தியாவசியமாக அறவிடப்பட வேண்டிய போகம்பரை சிறைச்சாலைக்கு தொடர்புடையதாக ரூபா 7,460 ஆன மீதி காணப்படுகின்றதுடன் தொடர்ந்தும் அது அறவிடுவதற்கு முடியாதுள்ளமையினால் அம் மீதி எதிர்காலத்தில் பழிவழிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென கணக்காய்வின் போது தெரிவித்துக் கொள்கின்றேன். சிறை சம்பளம் அத்தியாவசியமாக அறவிடப்பட வேண்டிய பதுளை சிறைச்சாலைக்குரிய ரூபா 8,400 ஆன மீதி காணப்படுகின்றதுடன் அது 2017 ஆம் ஆண்டிற்குரிதாக பெறப்பட வேண்டிய வருமானமாகும். 2018 ஆம் ஆண்டில் அத் தொகை சிறைச்சாலை நிறுவனத்திற்கு பெறப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 05 ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து மீண்டும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,880 ஆன முற்பணம் அறவிடப்படாது தொடர்ந்தும் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து மீள அறவிடப்பட வேண்டியுள்ள முற்பணம் ரூபா 1,880 ஆன பெறுமதி தொடர்பாக தகவல்கள் மற்றும் பதிவேடுகள் பரீட்சித்து அதற்காக உரிய நடவடிக்கை எடுப்படுமென இதனூடாக தெரிவித்துக் கொள்கின்றேன். | அறவிடப்ப வேண்டிய மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட நிதி பிரமாணம் 877 (2) (ஈ) பிரகாரம் கணக்கு ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியம் தொடர்பான சான்றுப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதி திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய செயலாற்றல் அறிக்கை சரியாக தயாரித்து நிதிக் கூற்றுக்கள் பிரதியுடன் அரச நிதித் திணைக்களத்திற்கும் பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென தெரிவிக்கின்றேன். | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.2. பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதி பிரமாணம் 877 (1) (இ) பந்தியின் பிரகாரம் வருடாந்த வரவுச்செலவு நடப்பு ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொது திறைச்சேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். காணப்பட்ட கொவிட் தொற்றினால் பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் வருமான வழிகள் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றமை, அரச பங்களிப்பு இல்லாதிருத்தல் போன்ற காரணங்களினால் நிதியத்தின் மீதி போதுமானதாக இல்லாமையினால் | சுற்றறிக்கை பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

நாயகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டியதுடன் அதன் பிரதி அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டிற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் நிதியத்தின் நோக்கங்களை ஓரளவேனும் அடைந்துக் கொள்வதற்காக வெளி நிறுவனம் மற்றும் தன்னார்வ அமைப்புக்களின் அனுசரனையுடன் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.